## ஸ்ரீ ரெக்ஷா

ஸ்ரீ ரெக்ஷா (ஐசி 625792/TCMS-2) எனப்படும் மரவள்ளி இரகமானது CIAT கொலம்பியா நாட்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பு இன நாற்றுகளிலிருந்து (CR24-4) தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். இந்த ரகம் 8 முதல் 9 மாதத்தில் முதிரக்கூடியதாகவும் மானாவாரி மற்றும் நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் நடவு செய்ய உகந்ததாகவும் விளங்குகின்றது. *இந்திய மரவள்ளித்தேமல் நோய் வைரஸ்* மற்றும் *இலங்கை மரவள்ளித்தேமல் நோய் வைரஸால்* ஏற்படும் மரவள்ளித்தேமல் நோய்க்கு எதிர்ப்பு தன்மையை முழுமையாக கொண்டது. இது அறுவடை கழிந்து கிழங்குகளில் உண்டாக கூடிய அறுவடை பின்சார் அழுகல் (பிபிடி) எனப்படும் சீரழிவைத் தாங்கும் தாங்கும் வல்லமை கொண்டது (பிபிடி மதிப்பெண் <1). இதன் கிழங்கு பழுப்பு நிறம் கொண்ட தோல், இள மஞ்சள் நிற பட்டை மற்றும் வெள்ளை சதை கொண்டது. இந்த இரகமானது ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 40-50 டன் முதல் அதிகப்படியாக 125 டன் வரை மகசூல் தரக்கூடியது. இது நடுத்தர அளவு மாவுச்சத்து (27-32%), குறைந்த சயனோஜென் (35.01 பிபிஎம்) மற்றும் குறைந்த சர்க்கரை (1.10%) உள்ளடக்கம் கொண்டது. இது 2017 ஆம் ஆண்டில் கேரளா மாநிலத்தில் வெளியிட பரிந்துரைக்கப்பட்டதாயினும் தமிழ்நாட்டின் விவசாய பெருமக்களால் பெரிதும் விரும்பக்கூடிய இரகமாக மாறி வருகின்றது.




## சாகுபடி விவரங்கள்

| | |
|---|---|
| இடைவெளி | : 90X90 செ.மீ |
| தொழு உரம் (FYM) | : 12.5 டன் / ஹெக்டேர் |
| தழைச்சத்து : மணிச்சத்து : சாம்பல்சத்து (NPK) | : 100:50:100 கிலோ / செடி |
| செடிகளின் எண்ணிக்கை | : 12,500/ஹெக்டேர் |
| நடவு முறை | : மேடு /பாத்தி/ படுக்கை |




## ஒப்புகை

இந்த துண்டுப்பிரசுரம் வெளியிட நிதிஉதவி புரிந்த உயிரி தொழில் நுட்பத்துறையின் (DBT-BT/IC-2/ISCB/Phase IV/Cassava/ 2014 Dated 20.10.2014) INDO-SWISS CASSAVA NETWORK திட்டத்திற்கும், இந்த உயரிய ரகங்களுக்கான அடிப்படை தாவர பொருட்கள் வழங்கிய வெப்பமண்டல விவசாயத்திற்கான சர்வதேச மையத்திற்கும் (CIAT கொலம்பியா) மற்றும் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட மரவள்ளித் தேமல்நோய் எதிர்ப்பு இராகங்களின் மதிப்பீடு சோதனைகளுக்காகவும் (அஇஒஆதி-கிழங்குபயிர்கள்) இக்கணம் நன்றி செலுத்த கடமைப்பட்டுளோம்.

**விரிவாக்க கோப்புறை எண்: 02/2019, July 2019**



**தயாரிப்பு:**
**முனைவர் மா. நீ, ஷீலா, முனைவர் ச. விசாலாக்ஷி சந்திரா**
**முனைவர் க. மு. செந்தில்குமார்**



**வெளியீடு**

*முனைவர் அர்ச்சனா முகர்ஜி*
*இயக்குனர்,*
*ICAR-மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிலையம்*
*ஸ்ரீகாரியம், திருவனந்தபுரம்-695017, கேரளா, இந்தியா*
*தொலைபேசி : 0471-2598551*
*தொலைநகல் :0471-2590063*
*மின்னஞ்சல்: director.ctcri@icar.gov.in*
*வலைத்தளம்: https://www.ctcri.org*


# *உயர் விளைச்சல் மற்றும் மரவள்ளித்தேமல் நோய் எதிர்ப்பு இரகங்கள்*

***அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித்திட்டம்***
***(அஇஒஆதி-கிழங்கு பயிர்கள்)***







**ICAR- மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிலையம்**
**ஸ்ரீகாரியம், திருவனந்தபுரம்-695017**
**கேரளா, இந்தியா**

## மரவள்ளித் தேமல்நோய் எதிர்ப்பு இரகங்கள்

மரவள்ளி (*மாணிஹோட் எஸ்குலண்டா* கிராண்ட்ஸ்) எனப்படும் கிழங்கு வகை பயிர், எண்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் ஒரு முக்கிய உணவு மற்றும் தொழில் துறை பயிராக விளங்குகின்றது. பல்வேறு உயிரியல் மற்றும் உயிரற்ற காரணிகளால் மரவள்ளி உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அவற்றில், இந்திய மரவள்ளித்தேமல் வைரஸ் (ஐ.சி.எம்.வி) அல்லது இலங்கையின் மரவள்ளித்தேமல் வைரஸ் (எஸ்.எல்.சி.எம்.வி) ஆகியவற்றால் ஏற்படும் மரவள்ளித்தேமல் நோய் (சி.எம்.டி), மரவள்ளியின் உற்பத்தித்திறனைக் கட்டுப்படுத்தும் மிகமுக்கியமான நோயாகும். இது நிகழ்வின்நிலை/ வயதைப்பொறுத்து 20-50% அல்லது 80% வரை மகசூல் இழப்புகளை ஏற்படுத்தக்கூடும். 2011-2017 ஆம் ஆண்டில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திர பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் அகில இந்திய ஒருங்கிணைந்த சோதனைகளின் கீழ் மரவள்ளித் தேமல்நோய் எதிர்ப்பு இரகங்களின் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் நல்விளைவாக மரவள்ளித் தேமல்நோய் எதிர்ப்பைக் கொண்ட மூன்று மரவள்ளி இரகங்கள் மரவள்ளி விவசாயத்திற்காக மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தால் வெளியிடப்பட்டன. மேலும், அவை தொழில் துறை பயன்பாட்டிற்காக பிரபலப்படுத்தப்படுகின்றன.



தேமல்நோய் செடி



நோயற்ற செடி

| குணாதிசயங்கள் | ஸ்ரீ சக்தி | ஸ்ரீ சுவர்ணா | ஸ்ரீ ரெக்ஷா |
|---|---|---|---|
| வளரும் தன்மை | கிளைகள் இல்லாதது, நடுத்தர உயரம் கொண்டது (300-380 செ.மீ) | நேரானது, மேல்கிளைகள் கொண்டது, உயரம் (280-300 செ.மீ) | கிளைகள் இல்லாதது, நடுத்தர உயரம் கொண்டது (300-380 செ.மீ) |
| தண்டின் நிறம் | அடர் பழுப்பு | பழுப்பு | பழுப்பு |
| இளந்தளிரின் நிறம் | பழுப்பு | வெளிர்பழுப்பு | வெளிர்பழுப்பு |
| இலைக்காம்பின் நிறம் | பழுப்பு சாயல் கொண்ட பச்சை | அடர் ஊதா | அடர் ஊதா |
| கிழங்கு வடிவம் | கூம்பு/உருளை | கூம்பு/உருளை | உருளை |
| கிழங்கு பட்டை நிறம் | வெளிர் மஞ்சள் | வெளிர் மஞ்சள் | வெளிர் மஞ்சள் |
| கிழங்கு சதை நிறம் | வெள்ளை | வெள்ளை | வெள்ளை |
| வெளியான வருடம் | 2018 | 2018 | 2017 |

## ஸ்ரீ சக்தி



மரவள்ளித் தேமல் நோய் எதிர்ப்பு இரகம் TCMS-7 (IC625794) மத்தியஇரகவெளியீட்டிற்கு “ஸ்ரீசக்தி” என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தொழில்துறை பயன்பாட்டிற்காக தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் கேரளாவின் நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரி நிலப்பரப்பில் சாகுபடி செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. இது கொலம்பியாவின் காலியில் உள்ள CIAT லிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பின நாற்றுகளிலிருந்து (CR43-2) தேர்ந்தெடுக்கப்பட்டது. இது 9 முதல் 10 மாதகாலத்தைக் கொண்டது. மேலும், நேராக கிளைகள் இன்றி வளரக்கூடியதாகவும் *இந்திய மரவள்ளித் தேமல் வைரஸ்* மற்றும் *இலங்கை மரவள்ளித்தேமல் வைரஸால்* ஏற்படும் மரவள்ளித்தேமல் நோய்க்கு எதிர்ப்பு தன்மையை முழுமையாக கொண்டு விளங்குகின்றது. இதன் கிழங்குகள், கூம்பு/உருளை வடிவம், பழுப்பு நிற தோல், வெளிர் மஞ்சள் நிற பட்டை மற்றும் வெள்ளை சதை கொண்டு விளங்குகின்றது. இது அறுவடை கழிந்து கிழங்குகளில் உண்டாக கூடிய அறுவடை பின்சார் அழுகல் (பிபிடி) எனப்படும் சீரழிவுக்கு சகிப்புத் தன்மையையும் கொண்டுள்ளது. மேலும், 29% வரையிலான **மாவுச்சத்து** (26-32%) அளவு கொண்டு விளங்குகின்றது. இது ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 43 டன் முதல் அதிகப்படியாக 80 டன் வரை மகசூல் தரக்கூடியது.

## ஸ்ரீ சுவர்ணா

மரவள்ளித்தேமல் நோய் எதிர்ப்பு இரகம் TCa12-5 (IC6267768) மத்திய இரகவெளியீட்டிற்கு “ஸ்ரீசுவர்ணா” என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த இரகமானது மத்திய வெளியீடாக தொழில் துறை பயன்பாட்டிற்காக தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களின் மானாவாரி மற்றும் நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் நடவு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த இரகமானது CIAT கொலம்பியா நாட்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பு இன நாற்றுகளிலிருந்து (CR 35-8) தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். இது நேராக கிளைகள் இன்றி வளரும் தன்மையுடனான பழுப்பு நிற தண்டு, அடர் ஊதா இலைக்காம்பு மற்றும் வெளிர் பழுப்பு நிற இளந்தளிர்களை கொண்டு விளங்குகிறது. இதன் கிழங்கு, கூம்பு மற்றும் உருளை வடிவம்; பழுப்பு நிற தோல்; வெளிர் மஞ்சள் பட்டை மற்றும் வெள்ளை சதை கொண்டதாகும். இது ஏழு மாத கால அளவைக் கொண்டுள்ளது மற்றும் *இந்திய மரவள்ளித்- தேமல் நோய் வைரஸ்* மற்றும் *இலங்கை மரவள்ளித்தேமல் நோய் வைரஸால்* ஏற்படும் மரவள்ளித்தேமல் நோய்க்கு எதிரான எதிர்ப்பு தன்மை கொண்டது. மேலும், 25 முதல் 27% வரையிலான நடுத்தர மாவுச்சத்து அளவு மற்றும் குறைந்த சயனோஜென் (45 பிபிஎம்) கொண்டு விளங்குகின்றது. இந்த ரகமானது ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 38 டன் முதல் அதிகப்படியாக 48 டன் வரை மகசூல் தரும் வல்லமை கொண்டது.

